மக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 75 பிரமோதூத தை 28
(10 - 02 - 1991) ஞாயிறு

## இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களும் நிவாரணத்துக்கு விண்ணப்பம்

தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்த நிலையில் அதிக இலாபத்தில் இயங்கும் நிறுவனங்களும் தொழில் பாதிப்படைந்துள்ளதாக நிவாரணத்திற்கு விண்ணப்பித்துள்ளதாக தொண்டர் நிறுவனங்களின் வட்டாரங்கள் தெரிவித்தன. இதில் வியப்பு என்ன வென்றால் நாளுக்கு நாள் இறப்பவர்களின் தொகை அதிகரிக்கும் இவ்வேளையில் அந்தியகால சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களும் பாதிப்படைந்துள்ளதாக விண்ணப்பித்துள்ளனவாம். (70)

### ★ இந்தியப் பிரதமர் சந்திரசேகர் பேட்டி:

# இலங்கை விரும்பினால் இந்தியா உதவ முன்வரும்

## 'புலிகளைச் சமாளிப்பது ஸ்ரீலங்காவின் பொறுப்பு'

"இலங்கை மக்கள் விரும்பினாலன்றி அந் நாட்டின் உள் விவகாரத்தில் இந்தியா ஒருபோதும் குறுக்கீடு செய்யாது. இதை அந் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்" என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தம்மைப் பேட்டிகண்ட இரு சிங்களப் பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தெரிவிதுதுள்ளார்.

"இந்தியா தமது விடயத்தில் தலையிட வேண்டும் என இலங்கை மக்கள் எம்மைக் கோரினால் அது வேறு விடயம்" என்று குறிப்பிட்ட பிரதமர் விடுதலைப்புலிகள் தொடர்பாக இலங்கையுடன் இந்தியா எந்த விதமான தொடர்புகளையோ ஒப்பந்தத்தையோ கொண்டிருக்கவில்லை புலிகளைச் சமாளிப்பது இலங்கை அரசைப் பொறுத்த விடயம் என்றார்.

"இலங்கையின் இனப் பிரச்சினையை எப்படி சமாளிப்பது

...04 ஆம் பக்கம் பார்க்க

## வல்வை சேதம் குறித்த அறிக்கை ஐ. நா. செயலருக்கு அனுப்பப்பட்டது

வல்வெட்டித்துறை மக்கள் சார்பில் அவ்வூர் மூத்தகுடி மக்கள் சார்பில் கையொப்பமிட்டு ஐ. நா செயலாளர் நாயகம், அணிசேரா இயக்க நாடுகளின் தலைவரான யூகோஸ்லாவியா ஜனாதிபதி பிரிட்டிஷ்பிரதமர் ஜோன் மேஜர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

இம்மகஜரில் கடந்த மாதம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை சைக்கிளோட்டம் தமிழ் போட்டியாளர் மீது சுடுநீர் வீச்சு

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினமன்று திருகோணமலை நகரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியிலும் இனத்துவேஷம் காட்டப்பட்டுள்ளது.

அன்று நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் தமிழ், முஸ்லிம், சிங்கள

—04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் வந்த இளைஞரிடம் தங்கப்பாளங்கள் வவுனியாவில மீட்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக ரயிலில் பயணம் செய்த இளைஞர் ஒருவரிடம்இருந்து 285கிராம் நிறையுள்ள தங்கப்பாளங்களை வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து பொலிஸார் கைப்பற்றினர்.

மானிப்பாயைச் சேர்ந்த இந்த நபர் கொண்டுவந்த தங்கப்பாளங்களின் பெறுமதி

—04 ஆம் பக்கம் பார்க்க

## கந்தர்மடத்தில் குண்டு வீச்சு நான்கு பிள்ளைகளின் தாய் பலி

நேற்றுக்காலை 9. 00 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கந்தர்மடம் மணற்தரை வீதியில் தாக்குதல் நடத்தின.

இதனால் கட்டுவன் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த செ. செல்வலஷ்சுமி (35) என்ற நான்கு பிள்ளைகளின் தாய் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்.

திரு. வேலுப்பிள்ளை (80) கந்தர்மடம் புஷ்பநாதன் சிவசாந்தி (40) (வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை) ஆகியோர் காயமடைந்தனர்.

நான்கு குண்டுகள் வீசப்பட்டன அதில் ஒன்று சத்திய

—04 ஆம் பக்கம் பார்க்க

## கோக்குவிலிலும் பொமமர் தாக்குதல்

கொக்குவில் பொற்பதி வீதியில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சில் பிள்ளையார் கோவிலும் அப்பகுதியில் உள்ள சில வீடுகளும் கடைஒன்பறு சேதம் அடைந்தன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் (46) கொக்குவில், வி.விஜிதா (16) வி. லோகாம்பிகை (35) வி. கௌரி (12) ஆகியோர் பலத்த காயமடைந்தனர்.

வீட்டிற்கு அருகில் இருந்த குளியலறையில் அடைக்கலம் புகுந்த ஒரே குடும்பத்தைச் சோந்தவர்கள், அக்குளியலறை தரைமட்டமான

—04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினர் ஷெல் தாக்கு இருவர் காயமடைந்தனர்

நேற்று மாலை 4. 30 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

ஷெல்கள் காரைநகர் இடைப்பிட்டிப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் எஸ். சந்திரதாஸன் (16 எஸ். அன்னமலா ஆகியோர் காயமடைந்தனர். (ப 14)

## தச்சன்காட்டில் மோதல்

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் தச்சன்காட்டில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது.

இம்மோதல் சுமார் அரை மணி நேரம் நீடித்தது சேத விவரங்கள் தெரியவில்லை. (48)

## கட்டுத்துவக்கு ஒருவர் காயம் வயோதிபருக்கு யானை தாக்கு

நேற்று முன்தினம் மாலை 8 மணியளவில் புதுக்குடியிருப்புப் பகுதியில் யானையை விரட்டுவதற்கு வைத்திருந்த கட்டுத்துவக்கு வெடித்ததால் சி. தம்பையா (75) என்பவர் வலது கையில் பலத்த காயமடைந்தார்.

இச் சம்பவத்தினால் மதம் கொண்ட யானை காட்டுப் பகுதியால் நடந்துவந்த ஆண்டி வேலுப்பிள்ளை (71) என்பவரைத் தாக்கியுள்ளது. (ப 14)

## மாங்குளம் மின் திருத்த வேலை இன்னமும் ஆரம்பமாகவில்லை

கொழும்பு சென்ற அதிகாரிகள் திரும்பி வந்த பின்பே வடபகுதிக்கான மின்சாரம் கிடைப்பது பற்றி தெரியவரும்.

கொழும்புத் தலைமை அதிகாரிகளினதும் அனுமதி இன்னமும் கிடைக்காததினால் மாங்குளத்தில் மின்சார திருத்த வேலைகள் எதுவுமே ஆரம்பிக்கப்படவில்லை. (38)

## லொறிகளில் வந்த பொருள்கள் இரு வாரத்துக்கே போதுமானது

கடந்த வாரம் முல்லைத்திவு மாவட்டத்துக்கு லொறிகளில் வந்த உணவுப் பொருள்கள் இரு தடவைகளுக்கு நிவாரணம் வழங்கவே போதுமானது என முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது முன்றாம் கட்ட நிவாரணமே இம் மாவட்டத்தில் வழங்கப்பட்டு வருகிறது (38)

## தொலைத்தொடர்புதிணைக்களம் ஏப்ரல் முதல் சபையாகிறது

தொலைத் தொடர்பு திணைக்களம் ஏப்ரல் மாதம் 6-ம் திகதி முதல் சபையாக மாற்றப்படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அண்மையில் இத் திணைக்களத்தில் வழங்கப்பட்ட பதவியுயர்வுகள் ரத்துச் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (66)

### புதியபிரதிச் செயலாளர் நியமனம்

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு புதிய பிரதிச் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை II ஐச் சேர்ந்த எஸ். தில்லைநடராசா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ப-17)

## ரியூசன் வகுப்புகளுக்கு மாற்று ஏற்பாடு

ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு அடுத்த மாதத்திலிருந்து பாடசாலை நேரத்துக்குப் பிறகு மேலதிக வகுப்புக்கள் நடாத்த கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்.

ரியூஷனால் மாணவருக்கு மேலதிகச் சுமை ஏற்பட்டு அவர்களுடைய ஓய்வு நேரம் பறிக்கப்படுவதுடன் எமது இலவசக் கல்வி முறை மீதும் ஒரு மறைமுகத் தாக்குதல் நடக்கிறது எனவும் அமைச்சர் கூறினார்.

ஐ.நா.அ. உயர் ஸ்தானிகராலயம், ச. செஞ்சிலுவைச்சங்கம் குற்றச்சாட்டு:

# சர்வதேச தொண்டர் ஸ்தாபன வாகனங்கள் மீதும் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சு!

வடக்கு—கிழக்குப் பகுதியில் உதவிப்பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச ஸ்தாபனங்களின் வாகனங்கள் மீதும் ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிக்கப்டர்களும் தாக்குதலை நடாத்த ஆரம்பித்துள்ளதாக மேற்படி ஸ்தாபனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய சர்வதேச அமைப்புக்களே இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.


தமது வாகனங்களில் சர்வதேச ஏற்புடைய செஞ்சிலுவை அடையாளங்கள் மேலிருந்து பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரியக் கூடியவாறு பொறிக்கப்பட்டிருந்தும் அவற்றின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக இந்த ஸ்தாபனங்கள் தெரிவித்ததாக அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

### சம்பளக் கடன் விண்ணப்பம்

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான 3 மாதச் சம்பளக் கடன் விண்ணப்பப் படிவங்கள் தற்போது நாவலர்வீதியில் உள்ள இதன் தற்காலிக காரியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
கணபதிப்பிள்ளை அருணாசலம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05- 03- 1928 | 11- 01- 1991 |

(முன்னாள் ஆங்கில ஆசிரியர்- உதைப்பந்தாட்ட வீரர் - அருணாசலம் மோட்டோர் உரிமையாளர் மட்டுநகர் முன்னாள் N. O. B., C. T. B. பரிசோதகர்)

பலமான பாச ஒளியை வழங்கி
எம்மை வழி நடத்திய ஐயா
தொடர்ந்தும் உங்கள் பாச
ஒளியில் பாதையைத் தொடருவோம்

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கும் அன்னாரின் ஆன்ம ஈடேற்ற பணிகளில் கலந்தும்மதிய போசனத்தில் பங்கு கொள்ளுமாறும் அன்பர்கள் நண்பர்கள் உறவினர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பெரிய நாவலடி, கொடிகாமம்.
மகன் அ.நடேசன் மற்றும் குடும்பத்தினர்.
02062

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ் பல்கலைக்கழகக் கலைப்பீட முதலாண்டு மாணவி செல்வி தனேஸ்வரி சீனிவாசகம் அவர்களின் வெள்ளை நிறமான பைப்பை (புத்தகங்களும், சில உடைகளும் அடங்கியது) தபால்பெட்டிச் சந்தியில் இருந்து ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டுச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 02061

### தேவை

பெண்கள், இறுவரிகள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரிகமான முறையில் வெட்டித்தைத்துக் கொடுக்கக் கூடிய பெண் ரெயிலர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். ''திருமகள் றேடர்ஸ்'' (கல்வியங்காடு பெற்றோல்செற் எதிரில்) கல்வியங்காடு சந்தையடி கல்வியங்காடு. 02057

### விற்பனைக்கு

மிக்ஸ்வைற் திரவ சவர்க்காரம் (Liquid soap), வேப்பெண்ணெய் கைதடி ப. நோ கூ. சங்கத்திலும் விற்பனைக்கு உண்டு.
02063

## 3 வது ஆண்டு நினைவு அஞ்சலி



ஜெசிந்தா

| ஜனனம் | உதிர்வு |
|---|---|
| 14. 05. 82 | 29. 01. 88 |

திதி: 10. 02. 1991

கன்னல் மொழி பேசி எம்மை
கொள்ளை கொண்ட அஞ்சுகமே,
சின்ன விழிப்பார்வையினால்
சொக்க வைத்தாய் நெஞ்சகமே
மின்னலென நீ மறைந்து
ஆண்டு மூன்று ஆச்சும்மா
இன்னும் கூட ஓயவில்லை
விழியில் நீர் வீழ்ச்சியம்மா.

வி. பாலகிருஷ்ணன்
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார், உற்றார், உறவினர்.

02060

# 'இலங்கையில் மனித உரிமை மீறல்களை உடன் தடுத்து நிறுத்துங்கள்'

## சர்வதேச மனித உரிமைக்குழு அரசிடம் வற்புறுத்தல்!

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென சர்வதேச மனித உரிமைக்குழுவொன்று அரசை வற்புறுத்தியுள்ளது

இது தொடர்பாக இக்குழு இலங்கைஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது. இக் கடிதத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக உறுதிப் படுத்தப்பட்ட சில சம்பவங்களும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

இலங்கையில் மனித உரிமைகள் அதிகளவில் மீறப்படுவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு குற்றம் சாட்டியிருந்தமை தெரிந்ததே.

## 'காணாமற்'போன தங்கள் பிள்ளைகளுக்கு - அரசிடம் நஷ்டஈடுகோருகிறது தென்னிலங்கைத்தாய்மார்முன்னணி

படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் 'காணாமற்' போன தமது பிள்ளைகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனக் காணாமற் போன தென்னிலங்கை இளைஞர்களின் தாய்மார் முன்னணி அரசைக் கோரியுள்ளது.

அத்துடன் காணாமற் போன தமது பிள்ளைகள் இறந்துவிட்டதாக அத்தாட்சிப் படுத்தி அரசு அத்தாட்சிப் பத்திரம் வழங்கவேண்டுமெனவும் இவர்கள் அரசை வற்புறுத்தியுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜே. வி. பி. எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற்போன 50,000 இளைஞர்களின் விபரங்களையும் தாய்மார் முன்னணி அரசிடம் சமர்ப்பித்துள்ளது

படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற் போனோரின் தொகை ஒரு லட்சத்தைத் தாண்டலாமெனவும் ஏனையோரின் விபரங்கள் தற்பொழுது சேகரிக்கப்பட்டுவருவதாகவும் மேற்படி அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## மன்னாரில் ராணுவத்துடன் 'ஜிகாத்'

## குடும்பஸ்தர்களும் கைதாகிறார்கள்!

மன்னாரில் இராணுவத்தினருடன் தற்போது 'ஜிகாத்' இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் நடமாடி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களின் அடையாளம் காட்டுதலின் பேரில் அங்கு பொதுமக்கள் கைதாகி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

சில தினங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் கடமை புரியும் குடும்பஸ்தரான ஊழியர் ஒருவர் பள்ளி முனையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இது தவிர ஒன்பது பிள்ளைகளின் தந்தையான உழவு இயந்திரச்சாரதி ஒருவர் ஜிகாத் உறுப்பினர்களால் கைது செய்யப்பட்டார். இவர் பற்றிய விபரங்கள் எதுவும் பின்னர் அறியப் படவில்லை. (17)

## சேவைமூப்புள்ள எழுதுவினைஞர்களுக்கு அதிசிறப்புப் பதவி வழங்க ஏற்பாடு

அரசாங்க பொது எழுதுவினைஞர் சேவையின் முதலாம் தரத்தைச் சேர்ந்தவர்களும், எழுதுவினைஞர் சேவையில் அதிக காலம் சேவையாற்றியவர்களும் அதிசிறப்புப் பகுதிக்கு உயர்த்தப் படவுள்ளனர்.

எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்புப் பதவிகளுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப் பதவி உயர்வு முதலில் தற்காலிகமாகவே வழங்கப்படும். பின்னர் காலக்கிரமத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலமும், திறமை அடிப்படையிலான உயர்வின் மூலமும் நிரந்தரமாக்கப்படும் என அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (ப-1)

## யாழ் நகரில் 'தேம்பாவணிவிழா'

யாழ் திருமறைக்கலாமன்றம் கத்தோலிக்ககலை இலக்கிய வட்டத்துடன் இணைந்து நடாத்தும் 'தேம்பாவணி விழா' நாடக நாட்டுக்கூத்து கலை நிகழ்ச்சிப் போட்டிகள் மார்ச் மாதம் முதல் வாரம் யாழ்நகரில்நடைபெறவுள்ளன

நாடகப் போட்டி, நாட்டுக் கூத்துப் போட்டி, கலை நிகழ்ச்சிகள் வில்லுப்பாட்டு, டனம் என்பன இவ் விழாவில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டி விண்ணப்பங்கள் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் யாழ் திருமறைக்கலா மன்றத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (16)

## ஆசிரியர்களின் சேவைக்கால மதிப்புக்கு கல்வி அதிகாரியின் சிபார்சு போதுமானது!

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வரைவில் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்த நடைமுறைஒன்று நீக்கப் பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது

இப்புதிய அறிவிப்பின் பிரகாரம் 1970 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சேவைக்காலம் தொடர்பாக ஓய்வு பெறும் ஆசிரியர்கள் இனிமேல் மாவட்டக்கல்விப்பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் அல்லதுகல்வி அதிகாரி ஒருவரின் சிபார்சினைப்பெற்றால் மட்டுமே போதும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## அதிகஅகதிகளை உருவாக்கிய 'பெருமை' கடந்துவிட்ட 1990 இற்குக் கிடைக்கிறது

கடந்துவிட்ட 1990ஆம் ஆண்டு உலகில் அதிகளவு 'அகதிகளை' உருவாக்கிய 'பெருமை'யையும் பெற்றிருக்கிறது.

கனடாவில் இருந்து வெளிவரும் தமிழ்த்தினசரி ஒன்று இதுபற்றிய செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

'உலகின் பலநாடுகளிலிருந்தும் அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பித்திருப்போரின் தொகை கடந்த வருடம் அதிகரித்துள்ளதாக அகதிகளைக் கூடுதலாக ஏற்றுக்கொள்ளும் நாடுகள் கூட்டாக மதிப்பிடப்பட்டதாக அதில்குறிப்பிடப்பட்டுள்ளது

## சிவராத்திரி சொற்பொழிவுபோட்டி

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இம் மாதம் 12 ஆம் திகதி மாலை சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சொற் பொழிவுப் போட்டி ஒன்று இடம் பெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. போட்டி முடிவில்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனபோட்டியினை ஒழுங்கு செய்துள்ள சரசாலை இந்து இளைஞர் மன்றம் அறிவித்துள்ளது.

## படகுக் கட்டணம் குறைப்பு

பண்ணை - மண்டைதீவு கடல் போக்குவரத்திற்கு அறவிடப்பட்டு வந்த பணம் நான்கு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னர் பயணி ஒருவருக்குப் பத்து ரூபாவும், துவிச்சக்கர வண்டியொன்றிற்குப் பத்து ரூபாவும் அறவிடப்பட்டது. தற்போது பயணி ஒருவருக்கும், துவிச்சக்கர வண்டியொன்றிற்கும் தலா ஆறுரூபா வீதம் அறவிடப்பட்டு வருகிறது. (24)

## சீர்குலையும் சிங்கக்கொடி

இலங்கையின் அமைதி குலைந்து நிலை சீரழிந்து போவது போல் தற்போது விற்பனை செய்யப்படும் தேசியக் கொடிகளில் பொறிக்கப்பட்டுள்ள சிங்கத்தின் அமைப்பும் உருக்குலைந்து சீரழிந்த நிலையில் காணப்படுவதாகத் தென்னிலங்கையில் உள்ள சில அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக இலங்கைப் பொதுச் சேவையாளர் சங்கத் தலைவர் மலியாகொட விடுத்துள்ள அறிக்கையில், தற்போது விற்பனைக்கு வந்துள்ள தேசியக் கொடிகள நாவல், கத்தரிப்பூ, சிவப்பு, குங்குமப்பூ எனப் பல்வேறு நிறங்களிலும் பல்வேறு சிங்க உருவங்களிலும் காணப்படுவதாகவும் இது இலங்கைக்கு அவமானத்தையும் அவமரியாதையையும் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

## 8புதிய உதவிஅரசஅதிபர் பிரிவுகள்

யாழ் மாவட்டத்தில் தற்போதுள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் 22 பிரிவுகளாக அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

தென்மராட்சி, நல்லூர், சங்கானை, தீவுப் பகுதி ஆகியவற்றில் தற்போதுள்ள பகுதிகள் பிரிக்கப்பட்டு மேலதிக பிரிவுகள் உருவாக்கப் படவுள்ளன. (ப-ப)

## விஞ்ஞான ஆய்வுக்களப் பயிற்சி

பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட விஞ்ஞான கணித ஆய்வுக்களப் பயிற்சி வகுப்பு 11 02 91 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும் என விஞ்ஞான ஆசிரிய ஆலோசகரான எஸ். அன்ரன் அவர்கள் தெரிவித்தார் (ப-10)

## கூட்டுறவுக் கூட்டம் ஒத்திவைப்பு

12 ஆம திகதியன்று யாழ். கூட்டுறவு அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. லிங்கநாதன் அறிவித்துள்ளார்.

## சங்குப்பிட்டி வீதி திருத்தப்படுகிறது

பரந்தன் - பூநகரி - சங்குப்பிட்டி வீதியை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

இந்த திருத்த வேலையில் கொழும்பு-கேரதீவு சேவையில் ஈடுபடும் சுமார் 100 லொறிகள்ஈடுபடுத்தப் பட்டுள்ளன. (ப-35,33)

## விடுதலை இயக்க விதைகள்

ஒரு நாட்டில் விடுதலைக்காகப் போராடும் இயக்கத்தைஇன்னொரு நாடோ, அரசோ ஆதரிப்பது எந்த அளவுக்கு நியாயமானது என்பது அவசியம் ஆராயப்பட வேண்டிய தொன்று, இவற்றுக்கான விடை அவரவர் மன நேர்மையைப்பொறுத்துத்தான் அமையும் என்பது மட்டும் வெளிப்படை. ஆனால், எதற்கும் எழுந்த மானத்தில் மாசு கற்பிப்பது நல்லதல்ல. அவதானிப்போடு ஆன்மநேய அடிப்படையில் அணுகுவதுதான் முறை.

தென் ஆபிரிக்க விடுதலை இயக்கம், பலஸ்தீனியர் விடுதலை இயக்கம் போல உலகில் எந்த நாட்டில் அடக்கு முறைக்கு ஆளாகும் மக்கள் சுதந்திரம் கேட்டுப் போராடினாலும் இந்தியா அதை ஆதரித்து வருகிறது. உலக நாடுகளிலும் சில ஆதரிக்கும் அதே வேளை, பல நாடுகள் கண்டும் காணாதது போலப் பாசாங்கு பண்ணுகின்றன. மௌனமே சாதிக்கின்றன. சில அடக்க ஆயுதம் கொடுக்கின்றன.

தமிழீழத்தில் சிங்கள இனவாத அரசினால் இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தமிழினம் காலம் காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்காக-அவர்களின் விடுதலைக்காகப் போராடிவருகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் ஆதரிப்பது தேசவிரோதச் செயலென்றோ, சட்டப்படி தவறான செயலென்றோ தீர்மானிக்க முடியாது.

எம். ஜி. ஆர். தன் ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தாமிக ஆதரவுநல்கினார் ஆயுதங்கள் வாங்குவதற்கென்றே பலகோடி ரூபா நிதியும் வழங்கினார்.

இன்றைய பல பிரச்சினைகளை 'முடிச்சு'ப்போட உதவியது உல்ஃபா இந்த அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி (ULFA)என்ற அமைப்பு; அஸாம் மற்றும் அதையொட்டியுள்ள சிறிய மாநிலங்களைச் சேர்த்து 'அஸாம் தனி நாடு' அமைக்கப்போராடும் தீவிரவாத விடுதலை இயக்கம். இவர்களை இந்திய இராணுவம் வேட்டையாடுகிறது.

வேட்டை தொடங்குவதற்கு முன்பாகவே இவர்களில் பலர் பர்மா, சீனா எல்லைப் பகுதிகளுக்குள் தப்பிஓடி விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இன்னும், பர்மாவில் நடைபெறும் இராணுவச் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துக் கெரில்லாப்போர் நடத்தும் இளைஞர்களுடன் இந்த உல்ஃபாக்களுக்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகளை ஆதரிப்பதை மட்டும் தேச விரோதச் செயல் என்று சொல்ல முடியாததாலே தான் உல்ஃபா தீவிரவாதிகளுக்குத் தமிழக அரசின் ஆதரவுடன் தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் பயிற்சிமுகாம் நடத்துகிறார்கள் என்ற பிரசாரம் இந்திரா காங்கிரஸாலும், அ. தி. மு. க. வாலும் முன்னெடுக்கப்பட்டது. இந்தப்புகாரைக் கூறி தி.மு.க அரசின் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டது.

"உல்ஃபா இயக்கத்துடன் தி. மு. க. அரசுக்குத் தொடர்புகள் இருப்பதாக ஆதாரங்களை உருவாக்கிவிட்டால் இதன் அடிப்படையில் தி. மு. க. ஆட்சியைக் கலைப்பதில் பிரச்சினையோ சிரமங்களோ இரா" இவ்வாறு முன்கூட்டியே மத்திய அரசின் பிரபல சட்ட ஆலோசகர் ஜி. இராமசாமி இந்திரா காங்கிரஸ்—அ. தி. மு, க. கூட்டணிக்குத் திட்டம் வகுத்துச் கொடுத்திருந்தார். அதுதான் சந்திரசேகர் வாயிலாக வெளியிடப்பட்டது; செயலாக்கப்பட்டது.

சரியான விதைகள் சரியான இடத்தில் வீழுந்தால் அவை முளைக்கத்தான் செய்யும்

# சர்வதேச நாணய நிதியத்துக்கு

# இலங்கை கட்டுப்படுகிறது

வளைகுடா நெருக்கடியால் அங்குள்ள இலங்கையர்கள் மூலமும் தேயிலை ஏற்றுமதி மூலமும் கிடைக்கும் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதால் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திருந்து (ஐ. எம். எவ்) 450 மில்லியன் டொலர் உதவி கோரவுள்ளது.

ஆனால் இம்முறை நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை விதிக்கலாம் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளதுபோல இலவச பல்கலைக்கழகக் கல்வியை நிறுத்தும்படியும் இலங்கை கேட்கப்படலாம்.

1988 இல் இந்த நிதியத்தில் இருந்து இலங்கை மூன்றாண்டுத்திட்டத்திற்காக 187 மில்லியன் டொலரைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஐ எம். எவ் இன் கோரிக்கைக்கு அமைய ரூபாவின் மதிப்பிறக்கம், துண்டு விழும் தொகையைக் குறைத்தல், இளைப்பாறுவோரை ஊக்குவித்து சிக்கனத்தைக் கொண்டுவருதல், உணவு எரிபொருள் போக்குவரத்து மானியங்களை நிறுத்துதல் முதலிய நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஈரானின் சமரஸ திட்டம் குறித்து ஆராய ஈராக் பிரதிப்பிரதமர் தெஹ்ரானுக்கு

ஈரான் ஜனாதிபதி ரவ்ஸன்ஞ்சானியின் புதிய சமரஸத்திட்டம் குறித்து ஆராய ஈராக்கின் பிரதிப் பிரதமர் சதாம்ஹமாதீ ஹெனி மூலம் ஈரான் சென்றுள்ளார் ஈரானின் சமரஸ திட்டத்தின்படி அமெரிக்காவுக்கும், ஈராக்கிற்கும்இடையிலானபேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க ஈரான் மத்தியஸ்தம் வகிப்பதாகும். இதனிடையே அடுத்த புதன் வளைகுடாப் போர் வெடித்தபின் முதற்தடவையாக ஐ நா. பாதுகாப்புச்சபை கூடுகிறது. யேமனும் கியூபாவும் கொடுத்த நெருக்குதலையடுத்தே சபை கூடுகிறது.

### அமெரிக்க அதிகாரிகள் ஆராய்வு

சவுதி அரேபியா சென்றுள்ள அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் செனியும் தளபதி பவலும் வளைகுடாவின் அமெரிக்க தளபதி சுவாஸ்கோவ்வுடன்தரைத்தாக்குதல் ஆரம்பிப்பது குறித்து ஆராய்கின்றனர். எனினும் இன்னமும் 10 நாட்களுக்கு விமான தாக்குதலை நடாத்தவே முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### இஸ்ரேல் மீது ஸ்காட்

நீண்ட நாட்களின் பின் நேற்று முன்தினமிரவு ஈராக் இஸ்ரேல் மீது ஸ்காட் ஏவுகணை தாக்குதலை நடாத்தியது. ஒரு ஸ்காட்ஏவப்பட்டதாகவும் இதை அமெரிக்காவின் பற்றியட் ஏவுகணை தடுக்கமுடியாமல் போய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது பாதுகாப்பு காரணங்களுக்காக ஏவுகணை வீழ்ந்த இடத்தை தெரிவிக்க மறுத்த இஸ்ரேல் 25 பேர் காயமடைந்ததாக மட்டும் கூறியது.

## நினைவுக் கூட்டம்

இன்று மு.ப. 9. 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கோப்பாய் பிராந்திய ஐக்கிய நாணய சங்கங்களின் ஆதரவில் நடாத்தப்படவுள்ளது.

(71)

### கந்தர்மடத்தில்—

செலன் விட்டு சமயலறையில் விழுந்து வெடிக்க வில்லை பத்துக்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

(33,74,70,47)

### இலங்கை...

என்பது குறித்து இந்தியா ஆலோசனை வழங்கும் நிலையில் இல்லை எனினும் இந்தியாவின் ஒத்துழைப்பு ஏதும் தேவை என இலங்கை எம்மிடம் கோரினால் அதுகுறித்து பின்னர், இந்தியா முடிவு எடுக்கும்.

அண்டை நாடான இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் பெருமளவு அகதிகள் வருவது எமக்கு கவலையாக உள்ளதுடன் கவலையும் தருகிறது இலங்கை அரசு எம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்" எனவும் இந்தியப்பிரதமர் தெரிவித்தார்.

### கொக்குவிலிலும்...

போதும் தெய்வாதீனமாக காயங்களுடன் தப்பியது இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணம்...

ஒன்பது லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர் குவைத்தில் இருந்து அண்மையில் நாடு திரும்பியவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

### திருமலை...

இளைஞர்கள் கலந்து கொண்டனர், சைக்கிளோட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை சைக்கிளோட்ட வீரர்களுக்கு நீர் அள்ளி ஊற்றிய சிங்கள விஷமிகள் சிலர் போட்டியில் கலந்துகொண்ட தமிழ் இளைஞர்கள் மீதும் முஸ்லிம் இளைஞர்கள் மீதும் சுடுநீரை வீசினர். இதனால் நிலைதடுமாறிய இப்போட்டியாளர்கள் போட்டியில் இருந்து விலகவேண்டிய 'பரிதாப நிலைக்குள்ளாகினர்,

(ப-6)

## செஞ்சிலுவை அடையாளம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் விரைவில் செஞ்சிலுவை அடையாளம் கூரைகளில் இடப்படவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்கும் செஞ்சிலுவைக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது தெரிந்ததே.(74)

### வல்வை—

20 முதல் 23வரை தொடர்ச்சியாக நான்கு நாள்கள் வல்வையில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் நிகழ்த்தியகொடூர அட்டூளியங்கள் விவரிக்கப்பட்டுள்ளன,

இதேவிடயம் சம்பந்தமாக இவர்கள்ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாஸா அவர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர். (39)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில்' உள்ள அச்சகத்தில் 10-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.